சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 31.01.2018

சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் தை மாதம் 18–ம் நாள் (ஜனவரி திங்கள் 31–ம் நாள்:–31.01.2018) புதன் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு எண்கள்.7/1 மற்றும் 7/8ல் அமையும் 2427.80 ச.மீ. அளவு கொண்ட நிலப்பரப்பிற்கு குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரியது தொடர்பாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) மதுரை அவர்களுக்கு தொழில் நுட்ப அனுமதிக்கு பரிந்துரை செய்யப்பட்டதில், உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள சாலையை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்குமாறு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களின் 17.01.2018ம் தேதிய ந.க.எண்.4132/2017/மம3 என்ற எண்ணிட்ட கடிதத்தின்படி அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க மனைப்பிரிவு உரிமையாளரால் 9.05 மீ அகலம் கொண்ட சாலையினை, தமிழக ஆளுநர் அவர்களின் பிரதிநிதியான ஆணையாளர் அவர்கள் பெயரில் தானமாக பத்திர பதிவு ஒப்படைப்பு செய்துள்ளார். மனைப்பிரிவு அனுமதி கோரியதில் நகர் ஊரமைப்பு துறையால் அறிவுறுத்தப்பட்டபடி மனைப்பிரிவு உரிமையாளரால் மனைப்பிரிவில் உள்ள சாலையினை உள்ளாட்சிக்கு தானமாக கொடுத்துள்ளதும், சாலையினை தார் சாலையாக அமைத்தும் சாலையின் இரண்டு பக்கங்களிலும் வடிகால் அமைக்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5328/2017/எப்1).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பராமரிக்ககபபட்டு வரும் தெருவிளக்குகளை தனியார் மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள நடைபெற்ற ஒப்பந்தத்தில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதி பெறாத காரணத்தினால் தேனி K.S.P.எலெக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு மற்றொரு ஒப்பந்தப்புள்ளியான ஆண்டிப்பட்டி சடையாண்டி ஏஜென்சீஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு வேலை உத்திரவு வழஙகப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் சூழ்நிலையில் இதனை எதிர்த்து தேனி KSP எலெக்ட்ரிக்கல்ஸ் நிறுவனர் திரு.விஜயன் என்பவர் வழக்கு எண்.WP(MD) No.23193/2017, சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளதை தொடர்ந்து மேற்கண்ட வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராக திரு.எம்.கருப்பசாமி பாண்டியன் அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ.10000/–த்தை வழஙக மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

**1. அனுமதிக்கலாம்.**

**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**

**3. அவசர அவசியம் கருதி தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட செலவினத் தொகை வழஙகியதை மன்றம் ஏற்கலாம்.**

**(ந.க.எண்.7410/2009/இ2).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2016–2017ஆம் ஆண்டில் நடைபெற்ற திட்டப்பணிகள் குறித்த விளம்பரம் மதுரை மணி தொழில் மலர் 2017இல் வெளியிட்டமைக்கான செலவினம் ரூ.15000/–த்தை மேற்கண்ட விளம்பரம் நிறுவனம் கேட்டுள்ளனர். எனவே மேற்கண்ட செலவினத் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு:– **1. அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.5251/2017/இ1).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பராமரிப்புப் பணி மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.290, நாள்.28.12.2017ம் தேதியன்று நிர்வாக அனுமதி பெற்றதை தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு 31.01.2018ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விவரப்படி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன் – 0.25 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.வனராஜ் – 0.40 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்.

அலுவலகக் குறிப்பு:– **1. குறைவான** ஒப்பந்தப்புள்ளியினை **மன்றம் ஏற்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சியில் பயன்படுத்தப்படும் பாதாள சாக்கடை நிதிக்கான கணக்கிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.3682/2016/இ1)**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டத்தில் கீழ் இயங்கி வரும் 1234 ஆழ்துளை துவாரங்கள் மற்றும் பாதாள சாக்கடை கழிவு நீர் மெயின் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்யவும் மற்றும் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு 31.01.2018ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதி வேண்டி கீழ்க்கண்ட விவரப்படி வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன் – 0.40 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.வனராஜ் – 0.50 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:–** **1. . குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சியில் பயன்படுத்தப்படும் பாதாள சாக்கடை நிதிக்கான கணக்கிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.0117/2017/இ1).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண்.289, நாள்.28.12.2017இல் ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 31.01.2018ம் அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன் – 0.21 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.வனராஜ் – 0.79 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர்.பரமானந்தன் அவர்களது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1450/2012/இ2).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

**பொருள் எண்.7**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் பொது கழிப்பிடம் மற்றும் சமுதாயக் கழிப்பிடங்கள் என மொத்தம் 24 எண்ணம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.38984/2014/பி1, நாள்.20.11.2017ன்படி ஒவ்வொரு கழிப்பறைக்ளுக்கும் அடையாளம் காணும் விதம் தனிப்பட்ட அடையாள எண் கொடுக்கப்பட்டு, நகராட்சியின் பெயர், வார்டு எண், இருக்கைகளின் எண்ணிக்கை, பராமரிப்பவரின் பெயர் மற்றும் மேற்பார்வையாளரின் பெயருடன் கூடிய விவரங்கள் அடங்கிய தகவல் பலகையினை வைக்கக்கோரி உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பணியினை பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி உடன் மேற்கொள்வதற்கு அனுமதியும் ஒரு கழிப்பறைக்கு ரூ.600/– வீதம் 24 கழிப்பறைகளுக்கு உத்தேச செலவினமாக ரூ.14400/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. இச்செலவினத்தை** SBM திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள IEC நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0131/2018/எச்1)

**தீர்மான எண், நாள்**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கில் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டம் **2015–16**ன் கீழ் ரூ.**110.00** இலட்சம் மதிப்பீட்டில் உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை பிரித்தெடுக்கும் இயந்திரம் பொருத்தி மேற்கண்ட இயந்திரம் இயங்கும் தருவாயில் உள்ள சூழ்நிலையில் அதற்கு தேவையான மின்சாரத்திற்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பத்தற்கிணங்க மேற்கண்ட இடத்தை செயற்பொறியாளர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், சின்னமனூர் அவர்கள் ஆய்வு செய்து அதற்காக மதிப்பீடு ரூ.86500/ஐ மதிப்பீட்டுக் கட்டணமாக செலுத்த கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்கண்ட மதிப்பீடு கட்டணம் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.4252/2014/இ2).**

**தீர்மான எண், நாள்**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.9**

சின்னமனூர் நகராட்சியில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் **2012–13**ம் ஆண்டில் ரூ.**50.00** இலட்சம் மதிப்பீட்டில் இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் நவீன எரிவாயு தகனமேடை கட்டி முடிக்கப்பட்டு தற்போது ரோட்டரி கிளப் சின்னமனூர் அவர்களின் பராமரிப்பில் உள்ளது. மேற்கண்ட எரிவாயு தகனமேடையினை **2018–2019**ம் ஆண்டிற்கான அனுமதி புதுப்பித்தல் (Annual Renewal) கட்டணமாக ரூ.**9000/–**ஐ தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் தேனிக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.2551/2012/இ1)**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பள்ளிக்கோட்டைபட்டியில் உள்ள கழிவறை மிகவும் மோசமான நிலையில் உள்ளதை புதுதில்லியிருந்து வருகை புரிந்த திறந்த வெளி கழிப்பிடம் குறித்து ஆய்வு மேற்கொண்ட போது அதனை பார்வையிட்டு அதிகாரி மேற்கண்ட கழிவறையினை புதுப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும் திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத நகரம் என சின்னமனூர் நகராட்சிக்கு சான்று தர மறுத்துவிட்டார். எனவே ஆய்வு மேற்கொண்ட அதிகாரியின் அறிவுறுத்தலை தொடர்ந்து மேற்கண்ட கழிவறையினை புதிதாக அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தில் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **1. அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.கஎண்.0116/2018/இ1).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் உள்ள தெருக்கள் காந்தி நகர் காலனி, பழைய பாளையம் ரோடு, முத்தாலம்மன் கோவில் தெரு, மின் நகர், சாமிகுளம் ஆகிய தெருக்களில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் இணைப்புகள் வழங்க தோண்டும் போது ஏற்படும் சேதங்கள் மற்றும் இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் சேதங்களினால் பாதசாரிகளுக்கும் வாகன போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் மேற்கண்ட தெருக்களில் உள்ள தார்சாலையில் உள்ள சேதங்களை சீர் செய்ய ஆகும் செலவினம் ரூ.500000/— மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெறவேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்குச் சொந்தமான நேருஜி பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலைய கடைகள், உணவகம் மற்றும் கட்டணக் கழிப்பறைகளை நகர்மன்றத் தீர்மான எண்.665, நாள்.18.07.2016ல் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைக்க முன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 23 கடைகள் மற்றும் 2 கழிப்பிடம் ஆகியவற்றினை 24.01.2018ம் தேதி மறு முன் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளி விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | கடை எண். | ஏலதாரர் / ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை (மாத வாடகை) |
|---|---|---|---|
| 1 | 30 | ரா.கலைச்செல்வி த/பெ.எம்.ராஜா, ஜங்கால்பட்டி அஞ்சல், காமாட்சிபுரம் வழி, தேனி மாவட்டம் | 2200.00 |
| | 30 | மு.கண்ணன், த/பெ.முத்துகிருஷ்ணன், சோலைத்தேவன்பட்டி, குப்பிநாயக்கன்பட்டி(அ), காமாட்சிபுரம் வழி, தேனி மாவட்டம் | 2000.00 |

அலுவலகக் குறிப்பு:–

**1. 24.01.2018ம் நாள் நடைபெற்ற 23 கடைகள் மற்றும் கட்டணக் கழிப்பறைகளுக்கு மறு முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 1 கடைக்கு மட்டுமே வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி கோர முன் வந்துள்ளனர். இதர இனஙகளுக்கு எவரும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர முன் வரவில்லை.**

**2. மேற்கண்ட 1 கடைக்கு மட்டும் வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி மட்டும் கொடுத்துள்ளனர். எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. மேற்படி கடைகளுக்கு கொடுத்துள்ள உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.**

**தீர்மான எண், நாள்**

**தீர்மானம்**

**பொருள் எண்.13**

சின்னமனூர் நகராட்சிக்கு சொந்தமான சங்கிலியார் திடலில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 22.02.2017ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் மறு ஏலம் கொண்டு வர ரா.முத்துவிஜயன் த/பெ.ராமசாமி என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு எண்.5446/2017 நகராட்சிக்கு சாதகமாக 30.08.2017ல் தீர்ப்பு வழஙகப்பட்டுள்ளதை எதிர்த்து திரு.ரா.முத்துவிஜயனால் தொடர்ந்த வழக்கு WP(MD) No.72487 of 2017 வழக்கறிஞர் கட்டணம் திரு.கே.மகேந்திரன் அரசு வழக்கறிஞருக்கு தொகை ரூ.7500/– மற்றும் இதர கட்டணம் ரூ.2500/– ஆக மொத்தம் ரூ.10000/– வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **அனுமதிக்கலாம். (ந.க.எண்.194.2015.அ2).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.14**

சின்னமனூர் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் புதியதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள நீருஞ்சும் கிணற்றிலிருந்து, தொட்டிக்கு தண்ணீர் கொண்டு செல்ல தேவையான 7.50HP மோட்டார், பேனல் போர்டு மற்றும் சூலீஸ் வால்வு வாங்கி பொருத்தும் பணிக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 27.12.2017ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்ற அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன் – 0.30 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.வனராஜ் – 0.40 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:–** **1. குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
**2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.15**

சின்னமனூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பொருட்கள் கீழ்க்காணும் விவரப்படி **25.01.2018**ம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் | விபரம் | தொகை ரூ.பை |
|---|---|---|---|
| 1. | மெர்குரி சாப்ட்வேர், பெரியகுளம் | Web Camera (1 nos) | 1450.00 |
| | | Epson Cartridge (5 nos) | 1600.00 |
| | | Mouse (2 nos) | 540.00 |
| | | Keyboard (1 nos) | 550.00 |
| 2. | யுனைடெட் இன்போடெக் | Web Camera (1 nos) | 1600.00 |
| | | Epson Cartridge (5 nos) | 1650.00 |
| | | Mouse (2 nos) | 580.00 |
| | | Keyboard (1 nos) | 600.00 |

அலுவலகக் குறிப்பு:– **1. வரிசை எண்.1ல் காணும் நிறுவனத்தின் குறைவான விலைப்புள்ளியினை ஏற்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.16**

சின்னமனூர் நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான HP Laserjet M202 Printer, Scanning Unit replaced (Skene, Pressure Roller, Scanning Unit) விநியோகம் செய்யும் பணிக்கு கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை ரூ.பை |
|---|---|---|
| 1. | மெர்குரி சாப்ட்வேர் நிறுவனம்,<br>வடகரை, பெரியகுளம் | 2200.00 |
| 2. | யுனைடேட் இன்போ டெக், மதுரை | 2300.00 |

அலுவலகக் குறிப்பு:– **1. வரிசை எண்.1ல் காணும் நிறுவனத்தின் குறைவான விலைப்புள்ளியினை ஏற்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.**

**தீர்மான எண், நாள்**